# இலங்கை சுங்கம்

## பெறுகை அறிவித்தல்

காங்கேசன்துறை துறைமுகத்தில் பணியாற்றும் சுங்கத் திணைக்கள அலுவலர்களின் விடுதி வசதிகளுக்காக பின்வரும் வசதிகளுடன் கூடிய கட்டிடமொன்றை இரண்டு *(02)* வருட காலத்திற்கு மாதாந்த வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்வதற்காக விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

குறித்த கட்டிடமானது பின்வரும் வசதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

1. *06* அறைகளைக் கொண்ட விடுதிக் கட்டிடமொன்றாக இருத்தல்.
2. காங்கேசன்துறை துறைமுகத்திலிருந்து *20* கி.மீ க்கு உட்பட்டதாக அல்லது அதற்கு கிட்டிய வகையில் பிரதான பாதையினை முன்னோக்கியதாக வதிவிடப் பிரதேசமொன்னறில் அமைந்நிருத்தல் இருத்தல்.
3. தரை ஓடு பதிக்கப்பட்ட தரையினையும், விதானத்தினையும் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன், இணைப்புக் கழிப்பறை வசதிகளுடன் கூடிய குளியலறை வசதிகளுடன் தரை ஓடு பதிக்கப்பட்ட கட்டிடம் ஒன்றாகவும் இருத்தல்.
4. அறைகள் மற்றும் மண்டபம் என்பன மின்விசிறி மற்றும் வாயு சீராக்கல் வசதிகளைக் கொண்டிருத்தல்.
5. மண்டபம் சாய்விருக்கை ஒன்றினைக் கொண்டிருத்தல்.
6. மின்சாரம் மற்றும் நீர் வசதிகளைக் கொண்டிருத்தல்.
7. கட்டிடத்தைச் சுற்றி பாதுகாப்பு வேலி அல்லது சுற்றுச்சுவருடன் வாயிற் கதவுகளையும் கொண்டிருத்தல்.
8. விடுதிக் கட்டிடத்தில் ஒவ்வொரு அறையும் *02* கட்டில்கள், *02* புடவை இறாக்கைகள், அலுவலக மேசை மற்றும் நாற்காலி ஒவ்வொன்றினையும், அலுமாரி ஒன்றினையும் கொண்டிருத்தல்.
9. விடுதிக் கட்டிடத்தின் சமயலறையானது, குளிர்சாதனப் பெட்டி, எரிவாயு அடுப்பு *(Gas Cooker), (*குறைந்தபட்சம் இரண்டு வாயுவிளக்குகள்*)*, மின்கலப்பி *(Blender)*, நுண்ணலை அடுப்பு *(Microwave Oven)*, மின் கேத்தல் என்பனவற்றினைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன், இணைப்புடன் கூடிய தொலைக்காட்சிப் பெட்டியொன்றையும் *(Television with connection)* வழங்குவதுடன், வழங்கப்படுகின்ற மின் உபகரணங்கள் நன்கு இயங்கு நிலையிலும் இருத்தல் வேண்டும்.
10. குறைந்த பட்சம் *02* வாகனங்களை நிறுத்திவைக்கக் கூடியதாக கொங்கிறீற்று பதிக்கப்பட்ட தரையினைக் கொண்டிருத்தல்.

**நிபந்தனைகள்**

1. விலைமனு சமர்பிக்கப்படுகின்ற காணி மற்றும் கட்டிடம் என்பன ஏதும் சர்ச்சைக்கு அல்லது நீதிமன்ற செயல்முறைக்கு உட்படாதிருத்தல்.
2. விலைமனுவுடன் பின்வரும் ஆவணங்கள் மற்றும் தகவல்கள் என்பனவும் சமர்ப்பிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
   - I. கட்டிடத்தின் உரித்தினை உறுதிப்படுத்துவதற்கான காணியுறுதியின் சான்றுபடுத்தப்பட்ட பிரதியொன்றினை, விலைமனு சமர்ப்பிப்பவர் குறித்த காணியின் அல்லது கட்டிடத்தின் உரிமையாளர் அல்லாதவிடத்து, துணை குத்தகை வழங்குவதற்கான சட்ட ஏற்பாட்டைக்கொண்ட குத்தகைக் காணியுறுதியின் பிரதியொன்றினை சமர்ப்பித்தல் வேண்டும்.
   - II. காணியின் வரைபடம்
   - III. கட்டிடத்தின் நில வரைபடம்
   - IV. கட்டிட அபிவிருத்திக்காக உள்ளூராட்சி நிறுவனத்தினால் வழங்கப்பட்ட அங்கீகாரம்
   - V. கட்டிடத்திக்காக உள்ளூராட்சி நிறுவனத்தினால் வழங்கப்பட்ட இணக்கச் சான்றிதழ்
   - VI. கட்டிடத்தில் காணப்படுகின்ற வசதிகள்
   - VII. மாதாந்த வாடகை *(*ரூபா*)*
   - VIII. தளபாடங்களின் பட்டியல்
   - IX. கிட்டிய முன் மாதத்திற்காக தீர்த்துவைக்கப்பட்ட பொதுப் பயன்பாட்டுக் கட்டணப் பட்டியல்களின் பிரதிகள்
   - X. ஏனையவை*(* விபரமாக குறிப்பிடவும்*)*
3. ஒப்பந்தக் காலவரையறைக்குரிய நீர் மற்றும் மின்சாரம் உள்ளடங்கலாக பொதுப் பயன்பாட்டுக் கட்டணப் பட்டியல்கள் இலங்கை சுங்கத்தால் தீர்த்துவைக்கப்படும்.
4. குத்தகைதாரரினால் உள்ளூராட்சி மன்றங்களுக்கு செலுத்த வேண்டியுள்ள சோலை வரிகள் போன்ற வரிகள் மற்றும் கட்டணங்களைச் செலுத்துதல் வேண்'டும்.
5. ஒப்பந்தம் வழங்கப்பட்ட *21* நாட்களுக்குள் வாடகை/குத்தகை ஒப்பந்தங்கள் கைச்சாத்திடுவதற்கும் அதற்கான அனைத்து செலவுகளையும் குத்தகைதாரரே பெறுப்பேற்க வேண்டும்.
6. ஒப்பந்தத் காலப் பகுதியில் கட்டிடம் மற்றும் வாகனத் தரிப்பிடம் என்பனவற்றிற்கான பயன்பாட்டுரிமையினை இலங்கை சுங்கம் கொண்டிருக்க வேண்டிய அதேவேளையில், கட்டிடம் மற்றும் வாகன தரிப்பிடம் தவிர்ந்த நிலப் பரப்பினை சிறந்த முறையில் பேணிப் பராமரிப்பது குத்தகைதாரரின் பொறுப்பாக அமைதல் வேண்டும்.
7. கட்டிடத்தின் சகல பழுதுபார்ப்பு நடவடிக்கைகளும் குத்தகைதாரரினால் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

8. நீங்கள் சமர்ப்பிக்கும் விலைமனுக்கள் உள்ளடங்கிய, முத்திரையிடப்பட்ட உறையின் இடது பக்க மேல் மூலையில், காங்கேசன்துறை துறைமுகத்தில் பணியாற்றும் சுங்கத் திணைக்கள அலுவலர்களுக்காக வதிவிட வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்காக விலைமனுக்களைக் கோருதல் என்பதைக் குறிப்பிடுதல் வேண்டும்.
9. முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை, **சுங்கப் பணிப்பாளர், சேவை வழங்கல் பணிப்பகம், 6 ஆம் மாடி, சுங்க இல்லம், இல.40, பிரதான வீதி, கொழும்பு 11** என்ற முகவரிக்கு 2025.02.05 ஆம் திகதி பி.ப 2.00 மணிக்கு முன்னர் கிடைக்கப் பெறும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். அவ்வாறின்றேல், சுங்க இல்லத்தின் 6 ஆம் மாடியில் அமையப்பெற்றுள்ள சேவை வழங்கல் பணிப்பகத்தில் வைக்கப்பட்டுள்ள பெறுகைப் பெட்டியினுள் இடப்படுதல் வேண்டும்.
10. விலைமனுக்களை ஏற்பதற்கான காலம் முடிவடைந்ததுடன், அவை உடனடியாகத் திறக்கப்படும் என்பதுடன், இதன்போது கட்டிட உரிமையாளர் அல்லது அவர் சார்பில் அவரால் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவர் பங்கேற்கலாம்.
11. விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்பட்ட கட்டிடங்களின் பொருத்தப்பாடானது, தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு உறுப்பினர்கள், பணிப்பாளர் (சேவை வழங்கல்) அல்லது சிரேஷ்ட பிரதிப் பணிப்பாளர் (சேவை வழங்கல்) ஆகியோரின் கள ஆய்வின் பின்னர் தீர்மானிக்கப்படும்.
12. சமர்ப்பிக்கப்பட்ட விலைமனுக்களை ஏற்பது அல்லது நிராகரிப்பது தொடர்பிலான முழு அதிகாரமும் சுங்கப் பணிப்பாளர் நாயகத்தினைச் சார்ந்ததாகும்.
13. மேலதிக விபரங்களை 011- 2221680 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக சுங்கப் பணிப்பாளரைத் (சேவை வழங்கல்) தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

**தவிசாளர்,**

திணைக்களம் சார் (சிறியளவிலான) பெறுகைக் குழு,

சுங்கத் தலைமைக் கட்டிடம்,

இல. 40, பிரதான வீதி,

கொழும்பு 11.